**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**அசல் வழக்கு எண் – 109/2024**

**பிரதிவாதி தரப்பு சாட்சி–1 சசிகுமார் –** திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 02.04.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை:**

1) வாதிகளை எனக்கு தெரியும். வாதிகள் வீடும் எனது வீடும் அருகருகே உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கு மேற்குபுறம் வாதிகள் வீடு உள்ளது. தாவா சொத்திற்கு கிழக்குபுறம் எனது வீடு உள்ளது. தாவா சொத்து சர்வே எண் 664/8 ல் உள்ளது என்றால் சரிதான். எனது வீடு சர்வே எண் 664/9 ல் உள்ளது என்றால் சரிதான், சர்வே எண் 664/10 லும் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ.2, பிரதிவாதிகளின் பெயரில் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்தான சர்வே எண் 664/8 ற்கும், பிரதிவாதிகளுக்கும் சம்பந்தமில்லை என்றால் சரிதான். தாவா தாக்கல் செய்வதற்கு முன்பு 14.10.2020 என அறிவிப்பு கொடுத்து தாவா சொத்தை நில அளவையர் அளவீடு செய்தார் என்றால் சரிதான். அவ்வாறு நில அளவையர் அளவீடு செய்த போது எனது சொத்தும், வாதிகளின் சொத்தின் அளவுகளும் சரியாக இருந்தது என்றால் சரியல்ல.

2) சர்வே எண் 664/8 ல் அளவு சற்று தள்ளி எனது நிலத்திற்குள் வந்தது. எனவே எனது நிலத்தின் அளவுகளை அளந்து கொடுக்க சொன்னேன். நில அளவையர் அளந்து காட்டவில்லை. நான் எனது நிலத்தை தனியாக அளந்து கொடுக்க வேண்டும் என மனு கொடுத்தேனா என்றால், 2016 ல் மனு கொடுத்து, அளவீடு செய்து எனது நிலத்தை சுற்றி வேலி போட்டுள்ளேன். 2020 ல் நில அளவையர் அளவீடு செய்த போது எனது வேலியைத் தாண்டி உள்பக்கமாக வாதிகளின் நிலம் வந்ததால்தான் நான் ஆட்சேபனை செய்தேனா என்றால் ஆமாம். அரசு ஆவணங்களின்படியும், பட்டாபடியும்தான் அளவீடு செய்தார்கள் என்றால் சரிதான். 2020 ம் வருடம் நில அளவையர் அளவீடு செய்த போதுதான் வாதிகளின் நிலம் எனது நிலத்தில் உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் ஆமாம்.

வழக்கு நிலுவையில் இருக்கும் போதுதான் நான் எனது நிலத்திற்கு கம்பி வேலி போட்டேன் என்றால் சரியல்ல.

3) எனது வீடு கிழக்கு பார்த்த வாசல் என்றால் சரிதான். மேற்குபுறம் நான் வரவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரிதான். நான் எனது பதிலுரையில் எனது வீட்டின் பின்புறம் பாதையாக பயன்படுத்தி வருவதாக சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யானது என்றால், கூடுதலாக உள்ள நிலத்தை பொதுவில் பயன்படுத்தி வருகிறேன். தற்போது பயன்படுத்துவதில்லை. எனது பதிலுரையில் எனது சொத்தை சுற்றிலும் கம்பிவேலி அமைத்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு தாவா சொத்தில் இருந்த மரத்தை நான் வெட்டிவிட்டேன் என்றால் சரியல்ல. கம்பிவேலிக்குள் எனது நிலத்தில் இருந்த மரத்தைத்தான் வெட்டினேன். மரம் வெட்டியது சம்பந்தமாக தோகைமலை காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

4) மேற்படி புகார் விசாரணையில் மரம்வெட்டியது தவறு என ஒப்புக்கொண்டு இனிவரும் காலங்களில் அவ்வாறு நடக்கமாட்டேன் என எழுதிக் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கு பின்னிட்டு தாவா சொத்தையும் சேர்த்து கம்பிவேலி போட்டுக்கொண்டு சட்டத்திற்க புறம்பான முறையில் வாதிகளின் நிலத்தை அபகரிக்க முயற்சிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தொடர்ந்து வாதிகளின் சுவாதீனத்தில் இடையூறு கொடுத்ததால்தான் வாதிகள் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரியல்ல. வாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தில் நான் இடையூறு கொடுத்ததால் வாதிகளுக்கு ஆதரவாக இவ்வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. எனது பதிலுரையில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/–R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**